RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன் அவர்களின் காலம் தோறும் பெண் என்ற நூல் ஓர் ஆய்வு

**தே. பிரகாஷ் [அ, *], ப. விமலா [அ]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை- 600032

# Rajam Krishnan's book 'Woman Through the Ages' is a research study

**T. Prakash [a, *], P. Vimala [a]**

[a] Department of PG Tamil & Research Department, Chellammal Women's College, Chennai – 600032

* Corresponding Author: dpprakash1990@gmail.com

Received: 30-11-2025
Revised: 27-02-2026
Accepted: 05-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan occupies a significant place in Indian literature, particularly in the tradition of Tamil women's writing. From the Sangam period, women poets such as Avvaiyar, Velliveethiyar, Kaakkaipaadiniyar, Aadimandhiyar, and Vennikuyathiyar articulated women's intellectual and social consciousness through their literary works. Continuing this legacy, Rajam Krishnan emerged as a pioneering Tamil woman novelist whose writings engage deeply with contemporary social realities. Her works critically examine the subjugation of women and expose various social evils prevalent in her time. This study analyses Rajam Krishnan's literary contributions to understand how her narratives function as a medium of social critique and resistance within a patriarchal framework.

**Keywords:** Rajam Krishnan, Kalamthorum Pen, Pen En Adimaiyanal

## முன்னுரை

எழுத்தாளர் தமிழில் நாவல், சிறுகதை, வாழ்க்கை வரலாறு மற்றும் கட்டுரைகள் என்று எண்ணற்ற நூல்களை இயற்றியுள்ளார் ஆனால் காலம் தோறும் பெண் என்ற ஒரு சமூகவியல் ஆய்வு நூலையும் நமக்கு கொடுத்துவிட்டு சென்றுள்ளார். நாவல், சிறுகதை போன்ற நூல்களை கற்பனை திறனுடன் எழுதிவிட முடியும். ஆனால் ஆய்வு நூலை இந்த சமூகத்தை ஆய்வு செய்து எழுத முடியும் அப்படி ஆய்வு செய்து எழுதிய இந்த நூல் இன்றைய சமூகத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி எனலாம். தந்தை பெரியார் எழுதிய பெண் ஏன் அடிமையானால் என்ற நூலில் பெண்கள் அடிமையானதற்கான காரணங்கள் சமூகக் கட்டுப்பாடுகள், மதம் மற்றும் திருமணம் ஆகியவை பெண்ணை எவ்வாறு அடிமைப்படுத்துகின்றன என்பதை விளக்கும்[1] ஒரு புரட்சிகரமான எண்ணிய நூலாகும். அதேபோல் காலம் தோறும் பெண் என்ற நூலும் பெண்கள் மட்டும் இல்லை முற்போக்கு சிந்தனை கொண்ட அனைவரும் கொண்டாடப்பட வேண்டிய ஒரு நூலாகும். அந்த நூலை ஆய்வது கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## வேதத்தில் என்ன இருக்கிறது

மேலைநாட்டில் வெள்ளையினம் கருப்பினும் என்ற பாகுபாடு இந்தியாவில் சாதிய பாகுபாடு ஒரு சாதிக்கு வேறு ஒரு சாதி எளிமையாக இருந்தது. படிக்கட்டுகள் போல ஆனால் எல்லா சமூகத்திலும் ஆணை விட பெண் கீழானவளாகவே நடத்தப்பட்டால் என்பது உண்மையே சில காலம் பெண்களின் இடுப்பு எலும்பை உடைத்த காலம் ஆனால் அந்த ஆதி நாட்களில் மனித இனம் பற்றி எழுத்தாளர் எழுதுகிறார். மனித இனக் குழுக்களின் பதவியாக தாயே முதன்மை பெற்றிருந்தாள் குழுமக்கள் அந்த தாயின் பெயராலேயே வழங்க பெற்றிருந்தனர். ஒரு குழுவுக்குள் கலந்து தினம் பெருக்கிய நிலை மாற வெவ்வேறு குழுக்களின் ஆண் பெண் இணைந்து சந்ததி பெருக்கும் முறை வந்த பின்னரும் புதிய இனக்குழுக்கள் தாய் வழியே அறியப்பட்டன [2] என்று விளக்குகிறார்.

## சகிப்புத்தன்மை உள்ளம் கொண்ட பெண்கள்.

ஆசிரியர் தன்னுடைய தோழி ஒருத்தியைச் சந்தித்த நிகழ்வை பதிவு செய்கிறார். அவர் மருத்துவக் கல்வியை முடித்து கிராமம் ஒன்றில் பயிற்சி பணி ஆற்றினால். பால்வினை நோயுடன் வரும் கிராமத்து ஆணாதிக்க வருக்கங்களைப் பற்றிச் சொல்கையில் அவர்கள் நாவில் இருந்தே உண்மையை வர வைக்கும் யுக்திகளைப் பற்றி விவரிக்கிறாள் இந்த சமயத்தில் கூட ஆணை விட பெண்ணே அதிகம் பாதிக்கப்படுகிறாள் என்று மனம் படைக்கிறார் [3].

காலமும் நேரமும் பெண்ணுக்கு:

விடியற்காலையில் மூன்று மணிக்கு எழுந்து லட்சுமி பூஜைக்கு உரிய பணிகளில்

ஈடுபட்டு விட்டால் கௌரி இத்தகைய லட்சுமி பூஜை கௌரி பூஜை என்றால் பெண்களுக்கு எத்தனை பொறுப்பு? வீட்டுப் பொருட்கள் பாத்திரம் பண்டம் உத்தமாக்கி வீடு பெருக்கி, முழுகி கோலமிட்டு மாவிலை வாழை தோரணங்கள் கட்டி மலர் சேகரித்து வைத்து பூஜைக்கு முக்கியமான அடுத்த தேவைகள் நிவேதனமாக போகிற பலகாரங்கள் அன்றே அரிசி ஊற வைத்து மாவிடித்து தேங்காய் துருவி அரைத்து மாங்கு மாங்கென்று பலகாரங்கள் அனைத்தும் செய்தாக வேண்டும் [4] என்று ஆசிரியர் ஒவ்வொன்றாக சொன்ன அத்தனை வேலையும் பெண் தான் செய்கிறாள் ஆணின் பங்கு இதில் ஒன்றுமே இல்லை என்றும் பெண் கடவுளைத் தொழுவதன் நோக்கமே கணவனின் ஆயுள் அதிகரிக்க வேண்டுதல் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார்.

## காப்பாளரும் கைவிடப்பட்டவள்

ஒரு திருமணம் நடக்கும் நிகழ்வை பற்றி விவரிக்கும் ஆசிரியர் மணமகள் நிலவை பழிக்கும் முகமும் கார்மேகம் ஒத்த கூந்தலும் என்று கவிகளின் வர்ணனைக்கு பொருந்த விளக்குகிறாள் மணமகன் நல்ல கருப்பு இந்த ஜோடியை பார்க்க வந்தவர்கள் விமர்சனம் செய்யாமல் இருப்பார்களா? பெண் நல்ல நிறம் மாப்பிள்ளை அத்தனை நிறமில்லை.... பிள்ளை கருப்பாக இருந்தால் என்ன? ஆணை கருத்தால் ஆயிரம் பொன் இப்படித்தான் பெண்களின் கருத்துப் பரிமாறல் நடக்கும் பெரிய ஆ்ஃபீஸராம் என்று முத்தாய்ப்பாய் வைக்கப்படும். என்று விமர்சனம் செய்வதில் கூட பாகுபாடு உள்ளது என்று கூறுகிறார்.

## சதி புராணம்

புராணங்கள் அனைத்தும் பெண்களுக்கு எதிராகத்தான் இருக்கிறது என்று ஆசிரியர் தன் கருத்தை ஆணித்தனமாக பதிவு செய்திருக்கிறார். உதாரணமாக அறிவு குருடாக்கப்பட்ட அபளைகள் பெண்கள் என்று ஆசிரியர் தன் ஆதங்கத்தை விளக்குகிறார். உதாரணமாக 1. கணவனுடன் சிதை அடிக்கி உடன்கட்டை ஏறும் பெண் பத்தினிகளுக்குரிய சொர்க்கத்தை அடைகிறார். 2. கணவனுடன் மறு உலகம் செய்பவள் மனித உடலில் உள்ள ரோம கால்களின் எண்ணிக்கைக்கு சமமாக மூன்றரை கோடி ஆண்டுகள் சொர்க்கம் அனுபவிக்கிறார்.3. மகா பாவம் செய்த கணவனாக இருந்தாலும் பாம்பு பிடாரன் பொந்தில் இருந்து பாம்பை கிழித்து விடுவது போல் கணவனை தன் பதிவிறத சக்தியினால் கூடிய நரகத்தில் விழுந்துவிடாமல் மீட்டு அவனுடன் மகிழ் உலகம் சொர்க்கத்தில் அனுபவிக்கிறாள். 4. கணவனுடன் உடன்கட்டை ஏறுபவள் மூன்று பரம்பரையினரின் பாவத்தை கரைத்து விடுகிறான் ஒன்று தான் தாய் வழி பரம்பரை இரண்டு தன் தந்தை வழி பரம்பரை புகுந்த வீடாகிய கணவன் தோன்றிய பரம்பரை 5. கணவனையே தெய்வமாக நினைத்து வாழும் கற்பரசி உடன்கட்டை ஏறுவதால் இந்திரர் ஆளும் காலத்துக்கு சொர்க்கத்தில் மிக உன்னதமான மகிழ்ச்சியை கணவனுடன் அனுபவிக்கிறார். 6. எல்லா பாவங்களிலும் கொடிய பாவம் பிராமணனை கொன்ற பாவமே (பிராமணத்தியை அல்ல) அந்த பாவத்துக்கு ஆளாகி இருந்த போதிலும் சதி உடன் கட்டை ஏறுவதன் வாயிலாக கற்பரசியின் உயிர்த்தியாகம் அத்தகைய கொடிய பாவத்திலிருந்து அவனை மீட்கிறது. ஹரிதர் என்ற ரிஷி மிகவும் காட்டமாக ஒரு மாத்திரை கொடுக்கிறார். 'உன்னால் பிற்படுத்தப்பட்ட பெண் பார்த்துக் கொள்வாள். நீ எத்தகைய பாவத்தையும் செய்யலாம்' என்று ஆண் தட்டிக் கொடுக்கப்படுகிறான் ஆனால் பெண்ணோ " மரியாதையாக சிறையில் ஏறி விடு! இல்லாவிட்டால் மீண்டும் மீண்டும் இதுதான்!" என்று பயமுறுத்தப்படுகிறாள்.

மேற்கூறிய ரிஷிமுக வாசகங்கள் எப்போது, எப்படி உதித்தன என்பதற்கெல்லாம் விளக்கங்கள் தேடுவது சிரமமான செயல். ஆனால் தேடினால் எதை எதையோ கண்டுபிடிக்கலாம். ஏனெனில் பெண்ணின் கீழ் முக வரலாற்றை ஆராய முடியாதபடி, தெய்வீக வேத முத்திரைகள் என்ற இட்டு வித்தபின், புராணங்கள் என்ற புனை கதைக் களஞ்சியங்களையும் ஆதாரமாக்கி கொள்ள இந்த பொய்களை கொட்டி நிரப்பி வைத்தார்கள் என்று ஆசிரியர் புராணங்களை கடுமையாக எதிர்க்கிறார் [6].

## முடிவுரை

ராஜம் கிருஷ்ணனின் படைப்பான காலந்தோறும் பெண் என்ற சமூகவியல் ஆய்வு நூல் முழுவதும் பெண்களுக்கு எதிரான அத்தனை சதி வேலைகளையும் கண்டித்தும் அதை ஆதரிப்பவர்களை எதிர்த்தும் பெண் விடுதலைக்கான வழிகள் என்னவென்றால் அனைத்து பக்கங்களிலும் தன் எதிர்ப்பை கருப்பு எழுத்துகளால் பதிவு செய்து இருக்கிறார்.

தமிழில் உள்ள எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே என்று தொல்காப்பியம் கூறுவது போல காலம் தோறும் பெண் என்ற இந்த நூலில் காலம் தோறும் பெண்ணுக்கு எதிராக நடந்த நடந்து கொண்டிருக்கிற அநீதியை படம்பிடித்து காட்டி இருக்கிறார். வரதட்சணைக் கொடுமைகள், கொடூர கற்பழிப்புகள், சதி போன்றவை ஒழிக்கப்பட்டது என்று பேசினாலும் எழுதினாலும் அதன் தொடர்ச்சி இன்னும் தினம் தினம் நடந்து கொண்டு தான் இருக்கிறது என்று இந்த சமூகத்தை சாடுகிறார் அவர் சொல்வதை மறுக்க முடியாது. ஏற்கத்தான் வேண்டும்.

### References

இராஜம் கிருஷ்ணன், (1989) காலம் தோறும் பெண், தாகம் பதிப்பகம், சென்னை.

தந்தை பெரியார், (1933) பெண் ஏன் அடிமையானால், பகுத்தறிவுன் நூற்பதிப்பு கழகம்.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License